சொல்லப்பட்டிருந்தாலும், இதை உறுதியாக தமிழ் நாட்டில் சேலத்திற்கு அருகே தான் ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த சர்க்கார் வற்புறுத்துவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆந்திர மாகாணத்தின் நடவடிக்கைகளைப்பற்றி இந்த சர்க்காருக்கு தகவல் கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்ப பட்டிருப்பது எந்த முறையில் தயாரிப்பது என்பதைப்பற்றி. இந்த ரிப்போர்ட் வந்ததும் சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக் கரியையும் கொண்டு தமிழ் நாட்டில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உறுதியாக சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்த பிறகு மத்திய சர்க்கார் தான் முடிவு எடுப்பார்கள். ராஜ்ய சர்க்கார் முடிவு எடுப்பது அல்ல.

ஊராட்சி மன்றங்களுக்கு கட்டிடம்

* 687 **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் கூடிய சேர்மன்கள் மாநாட்டில் ஊராட்சி மன்றங் களுக்கு ஆபீஸ் கட்டிடம் கட்ட அரசாங்கம் ரூ. 3,500 கடனுகவும், ரூ. 3,500 மானியமாகவும் கொடுக்க கோரும் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசாங்கம் சில தொகைகளை ஒதுக்க வேண்டுமென்றும், அவைகளுக்குக் கட்டிடச் செலவில் பாதியை மானியமாகவும், பாதியை நீண்டகாலக் கடனுகவும் கொடுத்து உதவ வேண்டுமென்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், மேற்படி தீர்மானத்தில் உதவித் தொகையின் அளவைப் பற்றி குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுதே பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக உதவி அளிப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வந்தது. ஆனால் தேசீய நெருக்கடி நிலைமை காரணமாக அதைத் தள்ளிப்போட வேண்டி வந்தது.*

மீன்பிடித் துறைமுகம்

* 688 **கேள்வி—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள லீபுரத்தை மீன்பிடி துறைமுகமாக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?

24th July 1964]

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

Chinnar and Thoppaiar Scheme

* 689 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the **Hon. the Minister for Works be pleased to state—**

(a) whether it is a fact that the Chinnar and Thoppaiar Schemes of Dharmapuri taluk have been included in the B list of the Third Five-Year Plan ; and

(b) if so, whether the schemes would be taken up **for execution** within the Third Five-Year Plan **period** itself?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் திட்டங்களைப் பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வட சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து ஒரு கோரிக்கை வந்ததா? அந்தக் கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? 9-30 a.m.

கனம் திரு. வெ. ராமைய்யா : மாவட்ட ரீதியில் மட்டுமல்ல. அரசாங்கமே அதைப் பரிசிலனை செய்து மத்திய அரசாங்கத்திற்கும், ப்ளானிங் கமிஷனுக்கும் சிபாரிசு செய்யும்போது காவிரியோடு திட்டம் சம்பந்தப்பட்டிருப்பதால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியாமல் போய்விட்டது. நான்காவது திட்டத்தில் சேர்க்க ஆலோசனை செய்யும்போது இந்தத் திட்டங்களை மீண்டும் அரசாங்கம் பரிசிலனை செய்யும். முடிந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே சிறு, நடுத்தரத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த இரண்டு சிற்றாறுகளும் மேட்டூர் பகுதியிலே போய் காவிரியில் கலக்கக் கூடியவை. இவைகள் காவிரியில் கலக்கிறது என்பதற்காக இவற்றைத் தடை செய்திருக்கும்போது மைசூர் பகுதியில் காவிரியோடு சங்கமம் ஆகும் நதியின் குறுக்கே அணை கட்டலாமா? அப்படியானால் மைசூர் ராஜ்யத்தில் கட்டுவதாகச் சொல்லுகிறார்களே அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : காவிரி நதியைப் பொறுத்தவரையில் அணைகள் கட்டுவதைப் பற்றி ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி நமது ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, மைசூர் ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, அந்த ஒப்பந்தப்படி எங்கேனும் இங்கேயோ அல்லது மைசூரிலோ ஏதாவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசாங்கத்தின் மூலமாக இரண்டு அரசாங்கங்களும் எடுத்துக் கொள்ள அந்த ஒப்பந்தத்தில் இடம் இருக்கிறது.